விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 333 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 01 வெள்ளிக்கிழமை (17.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## புதிய பல்கலை ஆரம்பிக்க வேண்டும்
# புலம்பெயர் இலங்கையர்களுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு

(கொழும்பு)

தமிழ், சிங்கள புலம்பெயர் இலங்கையர்கள் இந்நாட்டு பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுநடைபெற்ற ஆர்ஜ.டி. அலஸின் 10ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் 15

## தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறுகள் வெளியாகின
### வெட்டுப்புள்ளி : யாழ் –145, கொழும்பு – 147

(கொழும்பு)

2023ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில்பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.

யாழ்.மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளி 145, கொழும் புக்கான வெட்டுப்புள்ளி 147.

பரீட்சைப் பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத் திற்கு சொந்தமான https://doenets.lk/ இணையத் தளத்தில் பார்வையிட முடி யும். (ம-7)

## வடக்கு - கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங் களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வட மாகாணத்தில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என அந்த திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை, தற்காலிக 15

## நாட்டை மீட்டெடுக்க
# பொருளாதார தீர்வு அவசியம்
### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க பொருளாதார தீர்வே அவசிய மானது. எனவே அனைவரும் பட்ஜெட்டுக்கு ஆதரவை தருமாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## கற்கோவளத்தில்
## சுவாசக் குழாயினுள் உணவு அடைத்ததால்
### இளைஞன் ஒருவர் மரணம்

(கரணவாய்)

உணவு சுவாசக்குழாயில் அடைத்ததனால் இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் புனிதநகர், கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் இராசரத்தினம் சுமணன் (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவார். 15



## நீதிமன்ற தீர்ப்பை ஏற்கேன்
### மகிந்த தெரிவிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

## 2024 வரவு செலவுத் திட்டத்தில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளது
### உதய கம்மன்பில எம்.பி



(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ள தாக பிவித்துரு ஹெல உறு மயவின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில வலியுறுத்தியுள் ளார்.

ஊடகங்களுக்கு 15

## மாலைதீவுக்கு ஜனாதிபதி விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க நேற்று மாலை தீவுக்கு பயணமாகியுள்ளார்.

மாலைதீவின் புதிய ஜனாதி பதியாக தெரிவான இப்ராகிம் முஹமது ஷோலி யின் பதவியேற்பு 15

## யாழில் நூற்றாண்டு கால பழைமையான மரம்
### சீரற்ற காலநிலையால் முறிந்து விழுந்தது



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நூற் றாண்டு கால பழைமை யான மரமொன்று சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன் தினம் புதன் 15

## உயர்நீதிமன்ற தீர்ப்பையடுத்து
### சந்திப்புக்களை தவிர்க்கும் பெரமுன

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் தினசரி ஊடகவிய லாளர் மாநாட்டை இரண்டு வாரங்களுக்கு நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள் ளது. 15

## சுகாதார சீர்கேடு
## யாழ்ப்பாண மாநகரில் 4 உணவகங்களுக்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு உட் பட்ட பகுதியில் சுகாதார சீர் கேடுகளுடன் இயங்கிய 4 உண வகங்களுக்கு சீல் வைக்கு மாறு நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபை யின் வண்ணார்பண்ணை பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர் தி.கிருபன் தலைமை யிலான குழுவினரால் 04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 04.11.2023 இல்
அதிபர் சேவை தரம் III இல் நியமனம்
பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்

**திரு. மகேந்திரன் சசிகரன்**

National Diploma in Teaching-English medium Maths(merit), BSc(Hons), PGDE (Distinction), MEd.

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பல பட்டங்களையும்
பதவி உயர்வுகளையும் பெற்று பணியாற்ற
கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

(17905)

வாழ்த்துவோர் :-
ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/பளை மத்தியகல்லூரி (தேசிய பாடசாலை)



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**சிதம்பரநாதன் இளங்குன்றன்**

{யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட
மூன்றாம் வருட மாணவன் (40 ஆம் அணி)}

பிறப்பு: 08.09.1997 இறப்பு: 17.11.2020

கொடியோரின் நயவஞ்சகத்தால் உன் திருமுகம்
மறைந்து ஆண்டு மூன்று ஆனாலும் மறையாது
உன் நினைவுகள்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-7673)

நிரந்தர முகவரி
நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.
தற்காலிக முகவரி
மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்



## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**பூலோகம் கோபாலகிருஷ்ணன்**

திதி : பூர்வபக்க பஞ்சமி - 17.11.2023

மண்ணில்
18.04.1953

விண்ணில்
28.11.2022

ஈரைந்து மாதங்கள் எழுவர் எமை சுமந்து
இவ்வுலகிற்கு ஈந்த எமதருமைத் தாயே!
கல்வியில் நாம் உயர நல்வழி காட்டிய தாயே!
காலனவன் உனைப் பிரித்து ஓராண்டு ஆனதுவோ!

உன் முகத்தில் தவழ்ந்திடும் புன்னகை - அது
நமக்கெல்லாம் கிடைத்திடும் பொன்னகை
எம் இலட்சியத்தை உன் இலட்சியமாக்கி
வெற்றி கண்ட எங்கள் அம்மாவே!
மறுபிறவி என்று ஒன்றிருந்தால்
மறுபடியும் வந்துவிடு நம் தாயாக!

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இமையாணன் சிறிமுருகப்பெருமானை
வேண்டி நிற்கின்றோம்.

(C-7676)

செல்விவளவு
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# கனடா செல்ல முயன்றவர் கைது

போலியான கனேடிய விசாவை பயன்படுத்தி சட்ட விரோதமாக நாட்டை விட்டு தப்பிச்செல்ல முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடிவரவு குடியகல்வு எல்லை பாதுகாப்பு பிரிவினரால் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பை சேர்ந்த 37 வயதான இரட்டை பிரஜாவுரிமை கொண்ட ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# இலவசக் கருத்தரங்கு

2023 க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்ற உள்ள தமிழ்ப் பாட மாணவர்களில் வருமான மட்டம் குறைந்த மற்றும் தூர இட மாணவரின் நலன்கருதி Zoom செயலியூடாக இலவசக் கருத்தரங்கு ஒன்று 18.11.2023 சனிக்கிழமை இரவு 8 மணிமுதல் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு நாக.தமிழிந்திரன் 076 772 7398 எனும் வட்ஸ்அப் இலக்கத்துடன் கொள்ளவும். (ம-7)



## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**அந்தோனிப்பிள்ளை யோச்கொனடி**
[ சின்னத்தம்பி ]

தோற்றம் : 29.05.1966 மறைவு : 15.11.2023

மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரோ? கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள்
ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்த்துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

(17906)

யாழ். குருநகர், அண்ணாசிலை.
077 082 7349

தகவல் - சிந்து

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2024 ஆம் ஆண்டிற்கான 1 வது மீள்கேள்வி அறிவித்தல் - திருத்தம்

2024ம் ஆண்டுக்கான பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொதுமலசலகூடங்கள் தொடர்பாக 14.11.2023ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி ஆகிய பத்திரிகை விளம்பரத்தில் தவறுதலாக கீழ்குறிப்பிட்ட இணுவில் சந்தை கோழிக்கடைக்குப் பதிலாக இணுவில் ஆட்டிறைச்சிக்கடை என பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை கீழ்குறிப்பிட்ட அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| தொ இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT உள்ள) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 305,550.00 | 250.00 |

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-7674)

17.11.2023

# கூறுவிலை கோரல்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் எதிர்வரும் 23.11.2023 (வியாழக்கிழமை) அன்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதனால்; **அலயத்தின் மேற்கூரை வேலை முழுமையாக கழற்றி சீர் மாற்றுதல், சுற்றுக்கோயில்களுக்கு கிரனைட் கல் பதித்தல், மாபிள் பதித்தல், முழுமையாக வர்ணம் பூசுதல், சிற்ப வேலைகள், கோபுர வேலைகள், கட்டுமான வேலைகள்** போன்ற வேலைகளை மேற்கொள்ளக் கூடியவர்கள்; ஆலயத்தின் வேலைகளை நேரடியாக பார்வையிட்டு கூறுவிலைகளை தனித்தனியாக தயாரிக்கப்பட்டு மூடிய தபாலுறையில் **தலைவர்/செயலாளர், தர்மகர்த்தா சபை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்** என முகவரியிட்டு 22.11.2023 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக ஆலய கருமபீடத்தில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*தொடர்பு :*
**தலைவர்**
**077 612 4276**
**செயலாளர்**
**077 791 7687**

இ.சிவமயூரன்
செயலாளர்,
தர்மகர்த்தா சபை,
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ள போவதில்லை

## மகிந்த ராஜபக்ஷ அதிரடி

**(கொழும்பு)**

**பொருளாதார நெருக்கடி தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ள போவதில்லை என முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தலதா மாளிகை வழிபாட்டின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்ளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர்களான மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டோரே காரணம் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த தீர்ப்பு தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில், உயர்நீதிமன்ற உத்தரவை யாராலும் மீற முடியாது அதனை எதிர்க்கவும் முடியாது. அதனை நாம் மதிக்க வேண்டும்.

எனினும், உயர் நீதிமன்ற தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்ள போவதில்லை. எனது தரப்பிலான கருத்துக்களை நீதி மன்றில் முன்வைக்க வாய்ப்பு கிடைக்குமென நினைக்கிறேன்.




மேலும், இலங்கையில் நடைபெறவுள்ள எந்தவொரு தேர்தலையும் எதிர்நோக்க நாம் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# விலங்குகளும் வாழ முடியாத நாடாக மாறிய இலங்கை

## அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

மனிதர்களுக்கு மாத்திரமன்றி விலங்குகளுக்கும் வாழ முடியாத நாடாக இலங்கையை ஆட்சியாளர்கள் மாற்றியுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். மஹரகம இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நமது நாடு முற்றிலும் அரசியல் சரணடலுக்கு பலியாகி வருகிறது. இதற்கான வலுவான அடித்தளத்தையிட்டது 1977 இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசாங்கமாகும்.

தேசிய மக்கள் சக்தி இந்த அழிவுப் போக்கிற்கு எதிராக பொது சமூகத்தின் சுதந்திரத்திற்காக அச்சமின்றி இயங்கி வந்தது.

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி, பொது மக்களின் வழிகாட்டுதலில் தான் ஜே.வி.பி கட்டியெழுப்பப்பட்டது. ஆனால் எமது கட்சியின் ஸ்தாபகரான ரோஹன விஜேவீர உட்பட பெருமளவிலான தோழர்கள் கொல்லப்பட்டனர்.

ஜே.ஆர் ஜெயவர்த்தன தான் இந்த கலாசாரத்தை தொடக்கி வைத்தார். ஒரு மாற்றத்திற்காக சந்திரிகாவை கொண்டு வந்தார்கள். மாற்றத்திற்காக கொண்டுவரப்பட்ட எந்தவொரு தலைவரும் மாற்றத்தை கொண்டு வரவில்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

# யுனெஸ்கோ நிறைவேற்று சபைக்கு தெரிவாகியது இலங்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் யுனெஸ்கோ நிறைவேற்று சபைக்கு இலங்கை 144 வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

2023-27 காலகட்டத்திற்கான 58 உறுப்பினர்களைக் கொண்ட அமைப்புக்கான தேர்தல் 42 ஆவது யுனெஸ்கோ பொது மாநாட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிலையில் 188 உறுப்பு நாடுகளில் 144 வாக்குகளைப் பெற்று இலங்கை நிறைவேற்று சபையில் தனது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் ஒன்பது வேட்பாளர்களில் ஆறு பேர் யுனெஸ்கோ உறுப்பு நாடுகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பங்களாதேஷ், கொரியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளாகும். (நி-5)

# போர் இல்லாத நேரத்தில் கூட படைகளுக்கு இவ்வளவு தொகையா?

## சுமந்திரன் எம்.பி கேள்வி

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நன்மைகளை வழங்கும் பல முன்மொழிவுகளை தாம் ஆதரிப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனை தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மற்றும் மீனவர்களுக்கு நன்மைகளை வழங்கும் பல முன்மொழிவுகளை கூட்டமைப்பு வரவேற்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் உள்நாட்டுப் போர் இல்லாத நேரத்தில் கூட ஆயுதப் படைகளுக்கு இவ்வளவு பெரிய தொகையை



ஒதுக்கப்பட்டுள்ளதை தமிழ்க் கூட்டமைப்பு அங்கீகரிக்காது என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (நி-5)

# மக்கள் போராட்டம் புரட்சியாக வெடிக்கும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

(கொழும்பு)

அரச வருமான இலக்கை தொகையில் மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி வருமானத்தை திரட்டிக்கொள்ளும் யோசனைகளை குறிப்பிடவில்லை.

வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதார கொள்கையாக உள்ளது. ஆகவே இந்த யோசனையை செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பாரியதொரு புரட்சியாக வெடிக்கும்.

ஆகவே மக்கள் போராட்டத்தை தடுக்க ஆட்சியாளர்களும் ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் யதார்த்த பூர்வமற்றது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தின் பல முன்மொழிவுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. 2022 ஆம் ஆண்டு 8.5 சதவீதமாக காணப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியை 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15.5 சதவீதமாக அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இது முற்றிலும் சாத்தியமற்றது. இந்த யோசனைகளை செயற்படுத்தினால் சமூக கட்டமைப்பில் பாரிய நெருக்கடிகள் தோற்றம் பெறும் என அவர் சுட்டிக்காட்டினார். (நி-5)

# சுற்றிவளைப்புகள் மூலம் 22 கோடி ரூபாய் அபராதம்

## நுகர்வோர் அதிகாரசபை அதிரடி

(கொழும்பு)

இவ்வருடம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மூலம் சுமார் 22 கோடி ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், பொருட்களை மறைத்து வைத்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்காக இந்த அபராதத் தொகை அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதத்திற்கும் இடையில் இந்த சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டிருந்ததாகவும், இதுவரை 19,000 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நேற்று முன்தினம் மாத்திரம் பொலநறுவை மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பல சுற்றிவளைப்புக்களின் மூலம் 4 இலட்சம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா அணி தகுதி





2023 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலியா அணி தகுதி பெற்றுள்ளது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய களம் இறங்கிய தென்னாபிரிக்கா அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. தென்னாபிரிக்க அணி சார்பில் டேவிட் மில்லர் 101 ஓட்டங்களைப்பெற்றார்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் Mitchell Starc மற்றும் Pat Cummins தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அதன்படி, 213 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 47.2 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அவுஸ்திரேலியா அணி சார்பில் Travis Head அதிகபட்சமாக 62 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். அதே போல், David Warner 29 ஓட்டங்களையும், Steven Smith 30 ஓட்டங்களையும் Josh Inglis 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் Tabraiz Shamsi மற்றும் Gerald Coetzee ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அதன்படி, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள 2023 உலகக்கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன.

(ம-7)






## சுமூகமான சூழலை ஏற்படுத்துவதே ஜனாதிபதி ரணிலின் நோக்கமாகும்

### இராஜாங்க அமைச்சர் அசோக

(கொழும்பு)

உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதன் ஊடாக நாட்டு மக்களுக்கு சுமூகமான சூழலொன்றை உருவாக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும் என பொதுநிர்வாக இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பினால் மாத்திரம் அதற்குத் தீர்வு காண முடியாதெனவும், அடுத்த வருடத்தின் முதற் காலாண்டில் சுமூகமான நிலைமை உருவாகும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், "மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் புதிய வருமான வழிமுறைகளை உருவாக்கக் கூடியதுமான வரவு செலவுத் திட்டம் ஒன்றும் முன்மொழியப்பட்டுள்ளது. அது தொடர்பிலான பல்வேறு விமர்சனங்களும் எழுந்துள்ளன என்றார்.

(ம-7)

## யாழ்ப்பாண...

13.11.2023 திங்கட்கிழமை கே.கே.எஸ் வீதி, மற்றும் இராமநாதன் வீதியில் உள்ள உணவகங்கள், பேக்கரி என்பன திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

ஏற்கனவே பல தடவைகள் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட நிலையிலும் 03 உணவகங்கள், ஓர் பேக்கரி என்பன சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியுள்ளது. இதனையடுத்து 03 உணவகங்கள், மற்றும் பேக்கரி என்பவற்றிற்கு எதிராக மேலதிக நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை விசாரித்த மேலதிக நீதவான் சுகாதார சீர்கேடுகள் திருத்தம் செய்யும் வரை 04 உணவு கையாளும் நிலையங்களையும் சீல் வைத்து மூடுமாறு பொதுச் சுகாதார பரிசோதகரிற்கு கட்டளையிட்டார். அத்துடன் வழக்குகளை மேலதிக விசாரணைகளிற்காக டிசம்பர் மாதத்திற்கு ஒத்திவைத்தார்.

இதனைத்தொடர்ந்து 04 உணவு கையாளும் நிலையங்களும் பொதுச் சுகாதார பரிசோதகர் தி. கிருபனால் சீல் வைத்து மூடப்பட்டன.

(ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் தகைமையுடனான கல்வியே வேலைவாய்ப்பை பெற வழிவகுக்கும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தொழில்தகைமையை பெற்றுக்கொண்டால் மாத்திரமே இலகுவில் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் மனைப்பொருளியல், ஆடை வடிவமைப்புக்கான கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ்.சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டிலே பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்கள் இடையிலேயே பாடசாலை கல்வியை நிறுத்திக் கொள்வதை நாம் பார்க்கின்றோம்.

வடக்கு மாகாணத்தில் 780 மாணவர்கள் பாடசாலையில் இருந்து தங்களுடைய கல்வியை இடைநிறுத்தி இருக்கின்றார்கள் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் பிரதம செயலாளரும் என்னிடம் தெரிவித்தனர்.

இதேபோன்று சாதாரண தர பரீட்சை, உயர்தர பரீட்சை ஆகியவற்றில், சித்தி அடையாத மாணவர்கள், பல்கலைக்கழக கல்வியை பெற முடியாதவர்கள் என பலர் வருடாந்தம் வேலை வாய்ப்பற்ற இளைஞர் தொகைக்குள்ளே சேர்த்துக் கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு மாகாணத்தில், தங்களுடைய பிள்ளைகள் பொறியியலாளராக அல்லது வைத்தியராக வரவேண்டும் என பெற்றோர் கனவு காண்கிறார்கள், அந்தக் கனவு தவறு என்றோ, குறை கூறவோவில்லை.

ஆனால் அதை எட்ட முடியாதவர்கள் அடுத்த கட்டமாக தங்களுடைய வாழ்க்கைக்கு தேவையான தொழில் தகைமையை பெற்றுக் கொள்வதற்கான வழி வகைகளை நோக்கி அவர்கள் பயணிக்க வேண்டும்.

அதற்காகத்தான் அரசாங்கம் தற்போது பல்வேறு வகைகளிலே தொழில்நுட்ப கல்விகளின் ஊடாக, கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக NVQ என்கின்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. தொழில் தகைமை என்பதற்கும் கல்வித்தகைமை என்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது.

நாங்கள் பல்கலைக்கழகங்களிலே பெற்றுக் கொள்ளுகின்ற பட்டங்கள் அனைத்தும் எங்களுக்கு தொழில் தகைமையை தருவதில்லை, அவற்றில் பெரும்பாலானவை கல்வித் தகைமை மட்டும் தான் எங்களுக்கு தருகின்றது. அந்தத் தகைமைகளோடு தொழில் தகைமை தேடுவது என்பது முயல்க் கொம்பான ஒரு விடயம்.

எனவே தொழில் தகைமையுடனான கல்வி தகைமையை பெற்றுக்கொண்டு தொழில் முனைவோர்களாக மட்டுமல்ல தொழில் வழங்குவர்களாகவும் மாற வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5-33-104)

# சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட எட்டு மாடுகளுடன் மூவர் கைது



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரமின்றி கொண்டு செல்லப்பட்ட 8 மாடுகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி லொறி ஒன்றில் மாடுகள் கொண்டு செல்லப்பட்ட நிலையில் முத்தையன்கட்டு பகுதியில் இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது குறித்த வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் மாடுகள் கொண்டு செல்லப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

சம்பவத்தில் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த இருவரும் புதுக்குடியிருப்பை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து இரண்டு மாடுகளும் கன்று ஒன்றுமாக மூன்று மாடுகள் இறந்த நிலையிலும் இரண்டு மாடுகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகிய நிலையிலும் ஏனைய இரண்டு மாடும் ஒரு கன்றுமாக மொத்தமாக 8 மாடுகளும் அவற்றை கடத்தி செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் வாகனத்தை மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மூவரையும் இம்மாதம் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் இறந்த மாடுகளை புதைப்பதற்கும் ஏனைய மாடு, கன்றினை ஒட்டுசுட்டான் விவசாய திணைக்களத்திற்கு கொடுக்குமாறும் நீதிவானால் தீர்ப்பு வழங்கப்பட்டது. (நி-6-299)



வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் நேற்று அராலி மத்தி குழுக்கன் வாய்க்கால் தூர்வாரப்பட்டது அடைமழை காரணமாக குடிமனைகளுக்குள் தேங்கி நிற்கும் வெள்ளநீர் வழிந்தோட முடியாது காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: கஜிந்தன்)


# இராசிபலன்

17.11.2023
கார்த்திகை 01, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 11.57 மணிவரை

பூராடம் பின்னிரவு 2.41 மணிவரை
சுபநேரம் -06.08-7.38 மணிவரை
இராகுகாலம்-10.38-12.08மணிவரை
சபரிமலை ஐயப்பன் விரதாரம்பம்


சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்.

வளவன்




மேஷம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், நேற்றைய பிரச்சினையொன்று இன்று முடிவுக்கு வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




கடகம்

வழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்




துலாம்

புத்திசாதுரியமான செய்திகளினால் புகழ் பெறுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.




மகரம்

திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.




ரிஷபம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், வார்த்தைகளில் நிதானம் தேவை, சஞ்சலங்கள் கூடும் வாய்ப்புண்டு.




சிம்மம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், அரைகுறையாக இருந்த பணியை மீதியும் தொடர்வீர்கள்.




விருச்சிகம்

குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.




கும்பம்

பணத் தேவைகள் பூர்த்தியாகும், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், காரிய அனுகூலமுண்டு.




மிதுனம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.




கன்னி

பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.



தனுசு

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.



மீனம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

மனமகிழ்ச்சி ஒன்றுதான் முகமலர்ச்சியைத் தருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள்

# சிறையில் வாடும் அரசியல் கைதிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள் என கடந்த 28 ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசியல் கைதிகளுக்காக குரல் கொடுத்து வரும், "குரலற்றவர்களின் குரல்" அமைப்பு தெரிவித்துள்ளது.**

அது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, கடந்த 2006 ஒகஸ்ட் 14 ஆம் திகதி இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு, 16 ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை "நிரபராதிகள்" எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை கடந்த 10 ஆம் திகதி அன்று விடுதலை செய்துள்ளது.

குறித்த வழக்கில், மாத்தளையை சேர்ந்த சுப்பிரமணியம் சுரேந்திரராஜா, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

ஒரு சந்தேகநபரை "நிரபராதி" என நிரூபிப்பதற்கு எமது நாட்டில் 15 ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது உண்மையில்கவலை தரும் விடயமே. இருப்பினும், மிக நீண்டகாலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்துவந்த இவர்கள் விடுதலை பெற்று அவர்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியை தருகிறது.

இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் மீதமிருக்கும் எமது உறவுகள், "எங்கள்ளையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!" எனக்கூறி விழிகலங்க வழியனுப்பிவைத்துள்ளனர். ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10பேரையும், ஜனாதிபதி பொதுமன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி-5-33-104)




உரும்பிராய் கிழக்கு காந்திஜி சன சமூக நிலைய புலம்பெயர் மண்ணின் மைந்தர்களின் அனுசரணையுடன் முதியோர் தின விழாவும் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் காந்திஜி சனசமூக நிலைய வளாகத்தில் தலைவர் தே.நமணதாசன் தலைமையில் இடம்பெற்றது.

## இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகம் நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் 3 மணி வரை யாழ். போதனா வைத்திய சாலை முன்பாக, கொமர்சல் வங்கி அருகே யாழ்.மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் இ.சுரேந்திரகுமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (நி-5)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் ஆடைவடிவமைப்பு கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 302மாணவிகளுக்கான தேசிய தொழில் தகைமை NVQ-04 தரச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. (படம்:-சுபேசன்)

# சிறுவர்களின் திறன் மேம்பாட்டிற்கு ஐ.நா சிறுவர் நிதியம் உதவ வேண்டும்

## வடமாகாண ஆளுநர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின் திறன் மேம்பாடு , பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களுக்கு உதவ வேண்டும் என ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதி நிதிகளிடம் வடமாகாண ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கும் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிற்கும் இடையில் விசேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் , உதவி பிரதிநிதி பெகோனா அரேலானோ, கல்வி உத்தியோகத்தர் உள்ளிட்ட குழாத்தினர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதன் போது, மாணவர்களின் கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படும் விதம், சிறுவர்களுக்கான திறன் மேம்பாட்டு செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், சட்டவிரோத செயற்பாடுகள், பெற்றோர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விழிப்புணர்வு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆளுநரால், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அத்துடன் சாதாரண மற்றும் உயர்தர பரீட்சையின் பின்னர் மாணவர்களின் நிலைப்பாடு கவலைக்கிடமாக காணப்படுவதாகவும், இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கப்படுதில்லை.

பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துள்ள நிலையில் அதனை தடுப்பதற்கான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகாமல் இருப்பதற்கு தேவையான விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்த ஆளுநர், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளிடம் அதற்காக செயற்றிட்டங்களுக்கு உதவ கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஐ.நா சிறுவர் நிதியம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும், வட மாகாண ஆளுநரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி இதன் போது தெரிவித்தார் (நி-5-33).

### 5 வருடங்களின் பின்

# சுகாதார சீர்கேடான உணவகத்திற்கு 25,000 ரூபா தண்டம் விதிப்பு

(அராலி)

சுகாதார சீர்கேடான உணவகத்திற்கு 5 வருட விசாரணையின் பின் ரூபாய் 25,000 தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள பிரபல அசைவ உணவகத்திற்கு எதிராக 2018 ஆம் ஆண்டு, திரு நெல்வேலி பொது சுகாதார பரிசோதகராக கடமையாற்றிய தி.கிருபனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சுகாதார சீர்கேடு தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் உணவக உரிமையாளர் குற்றத்தை ஏற்காத நிலையில் வழக்கானது நீதிமன்றில் கடந்த 5 வருடங்களாக நடைபெற்று வந்தது.

வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை வழக்கின் தீர்ப்பை வழங்கிய மேலதிக நீதிவான், இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில் உணவக உரிமையாளர் குற்றவாளி என தீர்ப்பளித்தார்.

அத்துடன் உணவக உரிமையாளரிற்கு 25,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. (நி-5-104)

# போலித்தாள் மூலம் பழங்கள் கொள்வனவு

## ஏமாற்றமடைந்த வியாபாரி

(கரணவாய்)

யாழ்.பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பழக்கடை ஒன்றில் நபரொருவர் போலி நாணயத்தாளை கொடுத்து வியாபாரியை ஏமாற்றி பொருட்களைப் பெற்றுச் சென்றுள்ளார்.

குறித்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை வியாபாரியிடம் 650 ரூபா பெறும்தியான பழங்களை வாங்கி விட்டு 5000 ரூபா போலி நாணயத்தாளை கொடுத்து மிகுதி பணத்தையும் பெற்றுக் கொண்டு வியாபாரியை ஏமாற்றிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் கடை உரிமையாளர் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். (நி-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவேறு வாகன விபத்துகளில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பண்டாரவளை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழ ந்துள்ளனர். நீர்கொழும்பு - கொழும்பு பிரதான வீதியின் வத்தளையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் கொள்கலன் வாகனமொன்று பாதசாரி மீது மோதிய விபத்தில் வத்தளையைச் சேர்ந்த 38 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், வத்தளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, பண்டாரவளை - பூனாகலை பிரதான வீதியின் துல்கொல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடக்க முற்பட்ட போது, மற்றுமொரு பேருந்து மோதி குறித்த பெண் உயிரிழந்துள்ளார்.

மக்குல் - எல்ல பகுதியை சேர்ந்த 82 வயதான பெண்ணொருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

**கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)**
**பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

மேற்படி சங்க பொதுக்கூட்டம் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.
சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்.** (C-7651)

**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்**
**ஆதனப் பெயர்மாற்றம்**
**17, சங்கரத்தை சங்கானை வீதி, வட்டாரம்-03**

வலிகாமம் மேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்-03,சங்கரத்தை சங்கானை வீதியிலுள்ள இல: 17 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **தவமணி பஞ்சலிங்கம்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்திற்கு **குமாரசாமி தவராசா** (முதலாம் புறம்), **பஞ்சலிங்கமும் பெண் தவமணியும், சிதம்பரப்பிள்ளை ஆறுப்பிள்ளையும் பெண் இரத்தினமும்** (இரண்டாம் புறம்) ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு சோ.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11200/21.06.1964 ஆம் இலக்க பிரிவிடல் உறுதியால் பிரிவிடல் செய்து சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**யூகராசா சாந்தினி** ஆகியவர் தனது தாயாரான குறித்த **பஞ்சலிங்கம் பெண் தவமணி** 19.02.2022 ஆம் திகதி மரண சாதனமின்றியும் நிர்வாகத் தத்துவப்பத்திரம் பெறுவதற்கு குறைவான பெறுமதியுடைய சொத்துக்களையும் வாரிசுகளாக தன்னையும் தனது சகோதரர்களான பிரபாகரன் பெண் சுகந்தினி, சிவனேசராசா பெண் ஜெயந்தினி, பஞ்சலிங்கம் நடேசலிங்கம், பஞ்சலிங்கம் தவனேசலிங்கம், பஞ்சலிங்கம் குமார் ஆகியோரை விட்டு இறந்து விட்டதாகவும், குறித்த தனது ஏனைய சகோதரர்கள் தமக்குரிய பங்குகளை ஏலவே பெற்றுவிட்டமையால் பெயர்மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை தனக்குரியதாகவே ஒதுக்கிவிட்டமையினாலும் அவர்களது விருப்பு மற்றும் அனுமதியின் பெயரில் தானே ஆட்சிசெய்து வருவதாகவும் குறித்த ஆதனம் தனது மாதாவழி முதுசம் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு S.R.G நிரோசினி முகதாவில் 505/24.05,2023 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த **யூகராசா சாந்தினி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **யூகராசா சாந்தினி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**
(17896)

# விபத்துக்களால் நாளாந்தம் 30 பேர் வரையில் உயிரிழப்பு

(கொழும்பு)

பல்வேறு விபத்துக்களால் நாளாந்தம் 30 பேர் வரையில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் சமூக வைத்தியநிபுணர் வைத்தியர் சமித்த சிரிதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் 2025ஆம் ஆண்டளவில் வருடாந்தம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை லட்சமாக அதிகரிக்கலாம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# விலங்குக் கடிக்குள்ளான 3 லட்சம் பேர் வைத்தியசாலையில்-சுகாதார அமைச்சு அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

விலங்கு கடி காரணமாக வருடாந்தம் 3 லட்சம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச் சின் தொற்றா நோய்கள் பிரிவின் விஷேட சமூக வைத்தியர் சமித சிறிதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

விலங்கு கடிக்கு உள்ளாகும் சிலர் அடையாளங்காணப்படாத நோய்க்கு உள் ளாகின்றனர். மேலும் சிலர் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே விலங்கு கடிக்கு ஆளாகுவதை தவிர்ப்பதற் கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் விஷேட சமூக வைத்தியர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார். (நி-5)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

*04.11.2023 அன்று இலங்கை அதிபர் சேவை III இற்கான நியமனத்தைப் பெற்றுக் கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியப் பெருந்தகைகளான*



திரு.இராசதுரை சிறீதரன் (J.P)
H.N.D.A, B.A ,P.G.D.E, M.Ed
SLPS III



திரு.சிவராசா அருளானந்தன்
N.D.T, Maths, B.A
SLPS III

Best Wishes

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பதவி உயர்வுகள் பெற்று சேவையில் சிறந்து விளங்க இறை ஆசிகள் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.
(17903)

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் வலம்புரி**

**இப்போது...**

**இல. 191, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**எனும் முகவரியில் இயங்குகிறது.**

(யாழ். பிறவுண் வீதியில் அரசடிச் சந்திக்கும் கலட்டி சந்திக்கும் இடையில்)

**மேலதிக தொடர்புகளுக்கு**

**076 097 3121**
**021 222 3378**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 300 அடி பள்ளத்தில் விழுந்த பேருந்து 38 பேர் பலி, 17 பேர் காயம்



(டில்லி)

ஜம்மு காஷ்மீரின் தோடாவில் பேருந்து ஒன்று 300 அடி பள்ளத்தாக்கில் விழுந்ததில் 38 பேர் உயிரிழந்ததோடு 17 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிஷ்த்வாரில் இருந்து ஜம்மு நோக்கிச் சென்ற பேருந்து படோட்-கிஷ்த்வார் தேசிய நெடுஞ்சாலையில் சென்ற போது 300 அடி பள்ளத்தாக்கில் விழுந்துள்ளது.

துரதிர்ஷ்டவசமாக 38 பேர் உயிரிழந்தனர் மற்றும் 17 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 4 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## அமெரிக்க, சீன ஜனாதிபதிகள் உச்சிமாநாட்டில் சந்திப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடந்த "இபைக்" உச்சிமாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில், உலகப் போர் மோதல்கள், பொருளாதார ஏற்ற இறக்கங்கள், போதைப்பொருள் கடத்தல், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன நெருக்கடிகள் குறித்து இரு தலைவர்களின் கவனம் செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

அந்த அம்சங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளைத் தணிக்க இந்தக் கலந்துரையாடல் உதவியதாக உலக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் போட்டி நிலவினாலும் அது மோதலாக உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில், வல்லரசு நாடுகளாக பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பேணுவதன் முக்கியத்துவத்தையும் அமெரிக்க ஜனாதிபதி சீன ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சீன ஜனாதிபதி, அமெரிக்கா-சீனா உறவுதான் உலகின் மிக முக்கியமான இருதரப்பு உறவு என்று கூறியுள்ளார்.

சீன ஜனாதிபதி 6 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## இஸ்ரேல்...

## அமெரிக்...

(வோஷிங்டன்)

இஸ்ரேலில் இரு...
பணயக்கைதிகளா...
விக்கக்கோரியும் யூ...
வகையிலும் அமெ...
ஒன்றை முன்னெடுத்...



இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகின்ற நிலையில், இந்தப் போரில் சுமார் 11 ஆயிரம் பாலஸ்தீனியர்கள்

## சீனாவில் தீ விபத்து 19 பேர் உயிரிழப்பு


(பீஜிங்)

சீனாவின் லியுலியாங் நகரில் பிரபலமான யோங்ஜு நிலக்கரி சுரங்க நிறுவனத்திற்கு சொந்தமான 5 மாடிகளைக் கொண்ட கட்டடத்தின் 2 ஆவது மாடியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதில் 19 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் அதிகாரிகள் தீவிபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். (நி-5)



## அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து குழந்தை உட்பட 9 பேர் பலி



(டில்லி)

ஹைதராபாத் நாம்பள்ளி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 4 பெண்கள், ஒரு குழந்தை உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

நாம்பள்ளி பகுதியில் 5 தளங்கள் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்பின் தரைத் தளத்தில் இருப்பு வைக்கப்பட்டிருந்த இரசாயனங்கள் அடங்கிய பீப்பாய்கள் காரணமாக தீவிபத்து ஏற்பட்டது.

அடுத்தடுத்து முதல் மற்றும் இரண்டாவது மாடிக்கும் தீ வேகமாகப் பரவியது. தகவலறிந்து வந்த தீயணைப்பு மீட்புப் படையினர் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்தனர்.

இதேவேளை, தீயில் சிக்கி இருந்த 21 பேர் மீட்கப்பட்டு அருகிலிருக்கும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் 6 வயது குழந்தை உட்பட 9 பேர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-5-6)

## காசா மருத்துவமனைக்குள் புதைத்த 200 உடல்கள்

### வைத்தியர்கள் தகவல்



(காசா)

காசாவின் அல்ஷிபா மருத்துவமனைக்குள் உயிரிழந்த 200 பேரின் உடல்களை மருத்துவமனைக்குள்ளேயே பாரிய புதைகுழியொன்றிற்குள் புதைத்துள்ளதாக மருத்துவர் அட்னான் தெரிவித்துள்ளார்.

100 இற்கும் மேற்பட்ட மருத்துவமனை பணியாளர்கள் 200 உடல்களை புதைத்தனர். சுமார் ஆறு மணித்தியாலங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவ... தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையின் பின் புற... திலிருந்து வரும் துர்நாற்ற... காரணமாக எங்களால் ஜன்ன... களை திறக்க முடியாத நிலை... காணப்பட்டது என தெரிவித்துள்ள... அவர், அங்கு காணப்பட்ட 12... உடல்களையும் பிரேத அறையில் இருந்த 80 உடல்களையும் எடு...த்து புதைத்துள்ளோம் என... குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளிநாடு


# ...ல் பணயக்கைதிகளை விடுவிக்கக்கோரி

# ...ிக்காவில் 2.9 இலட்சம் பேர் போராட்டம்

...ன்)

**...இருந்து 240 பேரை ஹமாஸ் அமைப்பினர் ...களாக பிடித்துச் சென்றனர். அவர்களை விடு ...ும் யூதர்களுக்கு எதிரான போக்கை கண்டிக்கும் ...அமெரிக்காவில் 2.9 இலட்சம் பேர் போராட்டம் ...னடுத்துள்ளனர்.**



...டயே ...ருகும் ...வரு ...ாரில் ...ர்கள்

இஸ்ரே லில் இருந்து காசாவுக்கு 240 பேர் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களை மீட்கும் பணியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், இஸ்ரே லில் இருந்து காசாவுக்கு பிடித்து செல்லப்பட்ட பணயக் கைதிகளை விடுவிக்கக்கோரி, அமெரிக்காவின் வோஷிங்டன் டி.சி.யில் 2.9 இலட்சம் பேர் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இஸ்ரேல் ஜனாதிபதி ஈசாக் ஹெர்ஜாக் நேரலை காணொளி ஊடாக மக்கள் கூட்டத்தினரிடம் உரையாற்றிய போது, ஹமாஸ் அமைப்பினரால் உயிரிழந்துள்ளதுடன் 2,700 பேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இஸ்ரேலில் 1,200 பேர் உயிரிழந்திருக்கின்றதுடன் பணயக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள குழந்தைகள், சிறுவர், சிறுமி கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்காக போராட்டம் நடத்த இவர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் உலகம் முழுவதும் ஒவ்வொரு யூதரும் பெருமையுடனும் மற்றும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கான உரிமைக்காக இப்போராட்டம் நடைபெறுகிறது என தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில், கல்லூரி மாணவ மாணவிகளும் பங்கேற்றனர். அவர்கள் பணயக் கைதிகளுக்கு ஆதரவாக வாசகங்கள் அடங்கிய ஆடைகளை அணி ந்தபடி பேரணியில் ஈடுபட்டனர்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி க்கு பின்னர் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவில் அதிக அளவில் மக்கள் கூடிய நிகழ்வாக இது காணப் படுவதோடு இதற் காக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பாது காப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என அந்நாட்டின் உள்நாட்டு பாதுகாப்புக்கான துறை தெரிவிக்கின்றது. (நி-5-6)

## ...துள் ...கள்



...தாக அவர் ...பின் புறத் ...ர் நாற்றம் ...ஜன்னல் ...த நிலை ...வித்துள்ள ...பட்ட 120 ...அறையில் ...ளயும் எடு ...ம் எனக் (நி-5-6)

## காசா மருத்துவமனையுடன் தொடர்புடைய ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கப் பாதை

### ஆதாரம் வெளியிட்ட இஸ்ரேல்



(காசா)

காசாவில் உள்ள ரன்டிசி மருத்துவமனையின் அடித் தளத்தில் சுரங்கபாதை அமைத்து ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருந்ததற்க்கான ஆதாரமாக 6 நிமிட வீடியோ ஒன்றை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோவில் தரை மட்டமாக்கப்பட்ட ஒரு கட்டடத்தில் ஒரு சுரங்க பாதையின் வழியை அதிகாரி ஒருவர் கண்டுபிடித்து, அந்த சுரங்கத்தின் வழியே உள்ளே செல்கிறார்.

அந்த சுரங்கத்தின் மறு பக்க வழி ரன்டிசி மருத்துவமனையில் திறக்கப்படுகிறது என அவர் விளக்குகிறார். அதேவேளை இது போன்றுதான் அல்-ஷிபா மருத்துவமனையிலும் உள்ளது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்து வருகிறது.

ஹமாஸ் அமைப்பை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் காசாவில் தாக்குதல் நடத்தி வருகிறது. மருத்துவமனைக்கு அடியில் சுரங்கம் அமைத்து ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி இருப்பதாக இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

ஆனால் பாலஸ்தீன அரசு, மனிதாபிமான உதவிகள் செய்து வரும் அமைப்புகள், ஹமாஸ் போன்றவை இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ளன. (நி-5-6)

## ஏமனில் படகு விபத்து 49 பேர் மாயம்



(சனா)

ஏமன் அருகே அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 49 பேரைக் காணவில்லையென சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த படகு 75 பேருடன் சென்று கொண்டிருந்த போது வேகமாக வீசிய காற்றில் நிலை குலைந்து அதிலிருந்தவர்கள் கடலுக்குள் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்துப் பகுதியிலிருந்து 26 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 49 பேரும் மாயமாகியுள்ளதாக ஏமன் கடலோரக் காவல் படையினர் குறிப்பிட்டுள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் வழக்கில் இருந்து மேலுமொரு நீதிபதி விலகல்

(கொழும்பு)

கிரிக்கெட் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிப்பதில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் நீல் இத்தவெலவும் விலகியுள்ளார்.

நேற்று காலை, இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான டி.என்.சமரகோன் மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையில் இருந்து விலகுவதாக நீதியரசர் நீல் இத்தவெல அறிவித்த நிலையில் இந்த வழக்கில் இருந்து இதுவரை 3 நீதியரசர்கள் விலகியுள்ளனர்.

இந்த மனுவை பரிசீலிக்கும் புதிய நீதியரசர்கள் அமர்வுக்கு நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் டி.என்.சமரக்கோன் ஆகியோர் பெயரிடப்பட்டனர்.

இந்நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் புதிய நீதியரசர்கள் குழுவின் முன்னிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை கிரிக்கெட் இடைக்கால குழு விவகாரம் குறித்து பரிசீலனை இடம்பெறவுள்ளது. (நி-5)

## விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தனது உயிருக்கு ஆபத்து என தெரிவித்துள்ள நிலையிலேயே அவருக்கான எம்எஸ்டி பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு காரணங்களிற்காக அமைச்சரவை பாதுகாப்பு பிரிவை சேர்ந்த ஏழு பேரை தனது பாதுகாப்பிற்கு பயன்படுத்துவதற்கு அமைச்சருக்கு உரிமையுள்ளது என தெரிவித்துள்ள நிஹால் தல்டுவ அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்ற தகவல்களால் அமைச்சரின் பாதுகாப்பிற்காக மேலும் மூவரை நியமித்துள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது. (நி-5)

## வரவு - செலவு திட்டத்திற்கு ஆதரவு - மகிந்த

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ தலதாமாளிகையில் இடம்பெற்ற வழிபாடு நிகழ்வுகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சி எனவும் அதனால் வரவு-செலவுத் திட்டத்தை முழுமையாக ஆதரவளிப்பதாகவும் முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 350 | 320 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 500 | 600 |
| தக்காளி | 300 | 380 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| கோவா | 320 | 300 | 260 | 400 |
| கரட் | 350 | 380 | 420 | 500 |
| பூசணி | 100 | 100 | 70 | 120 |
| புடோல் | 250 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 140 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 260 | 300 |
| பாகற்காய் | 500 | 500 | 380 | 600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 140 | 200 |
| பயற்றங்காய் | 550 | 450 | 400 | 600 |
| லீக்ஸ் | 250 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 180 | 200 | 160 | 300 |
| கறிமிளகாய் | 600 | 700 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 450 | 700 | 350 | 600 |
| போஞ்சி | 400 | 450 | 340 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 280 | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 1500 | 1200 | 1200 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 500 |
| வெங்காயப்பூ | -- | 400 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 40 | 80 | 120 | 60 |
| வல்லாரை | 150 | 160 | 50 | 50 |
| ஈரப்பலா | 150 | 150 | 80 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2967

### ஹரஷ்வி

முருகேசு : அலாவுதினின் அற்புத விளக்கு கண்டுபிடிச்சுட்டேன்..


மனைவி :
வாவ் ..சந்தோசம் ..என்ன விருப்பம் நிறைவேற கேட்டீங்க?

முருகேசு : என்னோட மனைவிகிட்டே இப்போ இருக்கிற மூளை திறனை, பத்து மடங்கா "பெருக்கணும்"னு கேட்டேன்..!

மனைவி : ஐ லவ் யூ டியர் .. எப்போ நிறைவேறும்


முருகேசு : அதுதான் முடியாதாம் , பூஜ்யத்தை எப்படி "பெருக்கினாலும்" பூஜ்யம்தான் வரும்னு சொல்லிட்டு போயிடுச்சு..!!!???

### அஜந்தா





### சோபிதா

வயசாகி வாற மாதிரி பீல்.
எப்டி சொல்ற?
8 இட்லிக்கு மேல சாப்பிட முடியல.
வயிறு புல் ஆயிடுது பயமாயிருக்கு.



### மதன்

பொண்டாட்டி திட்டும் போது
எனக்கு கோபம் அருவி மாதிரி கொட்டுது.



ஆனா நான் கோபப்பட்டு அப்புறம்
தீஞ்ச தோசை, உப்பில்லாத குழப்பு. இதான்
கிடைக்கும்ன்னு நெனைக்கும் போது
வர்ற கோபம் கூட நின்னுடுது.

### பிரதீப்

உப்பு இருக்கா என்று கேக்குறதுக்கு
ஏன்டா குவிச்சு வைச்ச தேங்காய
எல்லாம் சிதறியடிச்சுக்
கொண்டு வாறியள்



### ராம்



எதிரிக்குக் கூட வரக்கூடாத சோதனை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியுங்கள்

## இழப்பீடு பற்றி பின்னர் கதைக்கலாம்

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்

(மன்னார்)

விசாரணைக்காக இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இராணுவத்தை காப்பாற்றுவதற்காகவே இந்த நட்டஈட்டை வழங்க முயற்சிக்கிறார்கள் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணாமல் போன உறவுகளுக்காக மில்லியன் கணக்கில் இழப்பீடு வழங்க உள்ளதாக தெரிவித்திருந்தார்.

எங்கள் பிள்ளைகள் உறவுகள் காணாமல் போனவர்கள் இல்லை.அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள்.

அந்த பிள்ளைகளை தேடியே நாங்கள் இன்று வீதியில் இறங்கி போராடி வருகிறோம்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை விவரம் எமக்கு தேவை. பிடித்துச் செல்லப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது? என்ற உண்மையை அரசு கண்டறிய வேண்டும். அதன் பின்னர் நீதியை வழங்குங்கள்.அதன் பின்னர் நஷ்ட ஈடு தொடர்பாக கதையுங்கள்.

இதுவரை நாங்கள் உங்களிடம் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்காக நட்டஈட்டை கேட்கவில்லை. வாழ்வாதாரமும் கேட்கவில்லை.

காணாமல் போன இராணுவம் அல்லது சிங்கள மக்களுக்கு தாராளமாக உதவி செய்யுங்கள்.

தமிழ் இனத்திற்கு உதவி செய்வதாக இருந்தால் முதலில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டறியுங்கள். உங்களிடமே எமது உறவுகளை கையளித்தோம் என அவர் தெரிவித்தார். (நி-5-285)

## விழிப்பூட்டல் பேரணி



(யாழ்ப்பாணம்)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் பொலித்தீன், பிளாஸ்டிக் விற்பனையாளருக்கான பொலித்தீன் பாவனை தொடர்பான சட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் விழிப்பூட்டல் பேரணியும் நேற்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர், து.சுபோகரன் தலைமையில் இடம்பெற்றது. (நி-5)

## புகைப்பட, காணொலி வர்த்தகக் கண்காட்சி


(யாழ்ப்பாணம்)

புகைப்பட மற்றும் காணொலி வர்த்தக கண்காட்சியானது நாளை சனிக்கிழமையும், அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை யாழ்ப்பாணம், நோர்த்கேட் ஹோட்டலில் இடம் பெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-5)



மாவீரர்களின் பெற்றோர்கள் மதிப்பளிக்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்றது.மாவீரரின் பெற்றோர்கள் தமது உறவுகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தியதுடன் அவர்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் நினைவாக நினைவு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்-.தேவானந்தன்)

## நீரிழிவு தினத்தை முன்னிட்டு மல்லாவியில் குருதிப்பரிசோதனை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மல்லாவி ஆதார வைத்தியசாலையில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு குருதிப்பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மல்லாவி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் மாதாந்த கிளினிக் சிகிச்சைகளுக்கு வருகை தந்த நோயாளர்களுக்கு நீரிழிவு தொடர்பான விசேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் குருதியில் குளுக்கோஸ் அளவு தொடர்பிலான குருதிப் பரிசோதனை ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

இதன் மூலம் மல்லாவி, பாண்டியன்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவானோர் பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-315)

## மீள்குடியேற முடியாத நிலையில் சுமார் 160 குடும்பங்கள்

(கண்டாவளை)

கிளிநாச்சி மாவட்டத்தில் 160 வரையான குடும்பங்கள், மீள்குடியேற்றப்பட வேண்டிய தேவை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இதுவரை 49ஆயிரத்து 950 குடும்பங்களைச் சேர்ந்த ஒருஇலட்சத்து 49 ஆயிரத்து 288 பேர் இது வரையில் மீள் குடியேறியுள்ளனர்.

இந்த நிலையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகமாலை மற்றும் கிளாலி ஆகிய பிரதேசங்களில் வெடிபொருட்கள் அகற்றப்படாத காரணத்தினால் குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இதுவரை மீள் குடியேற்றம் செய்யப்படாத நிலையில் சுமார். 27 வருடங்களுக்கு மேலாக வெவ்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வெடிபொருள் அச்சம் காரணமாக 160 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-315)

## சட்டவிரோத மணல் அகழ்வுகளால் மோசமாக சேதமடையும் வீதிகள்

### நடவடிக்கை எடுக்குமாறு கிளாலிப் பகுதி மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்சியாக மேற்கொள்ளப்படுகின்றன

அதாவது குறித்த பிரதேசத்தில் இருந்து பெருமளவான மணல்கள் நாளாந்தம் டிப்பர் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இதனை தடுக்க வேண்டியவர்கள் இதற்கு ஆதரவாகவே செயற்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு இடம்பெறும் மணல் அகழ்வுகளால் குறித்த பகுதிக்கான 13 கிலோமீற்றர் நீளமான வீதி மிகமோசமாக சேதமடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த பகுதியில் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவது தொடர்பில் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் பிரதேச பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-5-315)

## காணிகள் தொடர்பான பிரச்சினைகள் ஆராய்வு

(வவுனியா)

வவுனியா மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுக் கூட்டமானது நேற்று காலை 9.30 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட செயலாளர் பி.ஏ சரத்சந்ர தலைமையில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டக்குழுவின் அனுமதியை பெறுவதற்காக நிலக்கோரிக்கைப் பட்டியலில் இருக்கும் காணிகள், அவை தொடர்பான விடயங்கள், பிரச்சினைகள் குறித்து இந்த கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறித்த கூட்டத்தில் மாவட்ட செயலாளருடன், மாவட்ட காணிப்பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகத்தின் உதவிபணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் விடயங்களுடன் தொடர்புடைய அலுவலர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். (நி-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 331





திருவிளக்கு ஏற்றுதல், திருமாலை புனைந்து சாற்றுதல், தேசாந்திரிகளுக்கும் சிவனடியார்களுக்கும் திருஅமுது செய்வித்தல் ஆகியவற்றுக்குப் பல அரசகுல மாதர்கள் நிவந்தங்கள் ஏற்படுத்திச் சிலாசாஸனம் அல்லது செப்புப் பட்டயத்தில் அவற்றைப் பொறிக்கும்படி செய்தார்கள்.

அரண்மனைப் பெண்டிர் ஆலயத் திருப்பணி செய்தல் அந்த நாளில் பொது வழக்காயிருந்திருக்க, சுந்தர சோழரின் அருமைப் புதல்வி குந்தவைப் பிராட்டி மட்டும் வேறொரு வகை அறத்துக்குத் தம் உடைமைகளைப் பயன்படுத்தினார். நோய்ப்பட்டிருந்த தம் தந்தையின் நிலையைக் கண்டு இரங்கியதனால் தானோ, என்னமோ, அவருக்கு நாடெங்கும் தர்ம வைத்தியசாலைகளை நிறுவ வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாயிற்று. பழையாறையில் பராந்தக சக்கரவர்த்தியின் பெயரால் ஓர் ஆதுரசாலை ஏற்படுத்தியிருந்ததை முன்னமே பார்த்தோம். அது போலவே தஞ்சையில் தன் தந்தையின் பெயரால் ஆதுரசாலை அமைப்பதற்குக் குந்தவைதேவி ஏற்பாடு செய்திருந்தார். இந்த விஜயதசமி தினத்தில் அந்த ஆதுரசாலையை ஆரம்பிக்கவும் அதற்குரியதான சாஸனங்களை எழுதிக் கொடுக்கவும் ஏற்பாடாகியிருந்தது.

தஞ்சைக் கோட்டைக்கு வெளியேயுள்ள புறம்பாடியில், பெருமாள் கோயிலுக்கு எதிர்ப்பட்ட கருட மண்டபத்தில், சுந்தர சோழ ஆதுரசாலையின் ஆரம்ப வைபவம் நடந்தது. திருமால் காக்கும் தெய்வமாதலாலும் கருடாழ்வார் அமுதம் கொண்டு வந்தவராதலாலும் விஷ்ணு கோயிலையொட்டிய கருட மண்டபத்தில் குந்தவைப் பிராட்டி ஆதுரசாலையை ஏற்படுத்தி வந்தார். இந்த வைபவத்திற்காக, தஞ்சை நகர மாந்தரும் அக்கம் பக்கத்துக் கிராமவாசிகளும் கணக்கற்றவர்கள் கூடியிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அலங்கார ஆடை ஆபரணங்கள் பூண்டு கோலாகலமாகத் திரண்டு வந்தார்கள். சோழ சக்கரவர்த்தியின் உடன் கூட்டத்து அமைச்சர்களும் பெருந்தர, சிறுதர அதிகாரிகளும் சிலாசாஸனம் பொறிக்கும் கல் தச்சர்களும் செப்புப் பட்டயம் எழுதும் விசுவகர்மர்களும் அரண்மனைப் பணியாளர்களும் ஏராளமாக வந்து கூடியிருந்தார்கள். தாரை, தப்பட்டை முதலிய வாத்தியங்களை எட்டுத் திசையும் நடுங்கும்படி முழங்கிக் கொண்டு வேளக்காரப் படையினர் வந்தார்கள். தஞ்சைக் கோட்டையின் காவல் படை வீரர்கள் வாள்களையும் வேல்களையும் சுழற்றி 'டணார், டணார்' என்று சத்தப்படுத்திக் கொண்டு வந்தார்கள். பழுவேட்டரையர்கள் இருவரும் யானை மீதேறிக் கம்பீரமாக வந்தார்கள். இளவரசர் மதுராந்தகத் தேவர் வெள்ளைப் புரவியின் மேல் ஏறி உட்காரத் தெரியாமல் உட்கார்ந்து தவித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். இளவரசி குந்தவைப் பிராட்டியும் அவருடைய தோழிகளும் முதிய அரண்மனை மாதர் சிலரும் பல்லக்கில் ஏறிப் பவனி வந்தார்கள். இன்னொரு பக்கமிருந்து பழுவூர் இளையராணி நந்தினியின் பனை இலச்சினை கொண்ட தந்தப் பல்லக்கும் வந்தது.

அரண்மனை மாதர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த நீலப்பட்டு விதானமிட்ட இடத்தில் குந்தவை தேவியும் பழுவூர் ராணியும் மற்ற மாதர்களும் வந்து அமர்ந்தார்கள். பிறகு, பெரிய பழுவேட்டரையர் சமிக்ஞை செய்ததின் பேரில் வைபவம் ஆரம்பமாயிற்று. முதலில் ஓதுவாமூர்த்திகள் இருவர் "மந்திரமாவது நீறு" என்ற தேவாரப் பதிகத்தைப் பாடினார்கள்.

யாழ், மத்தளம் முதலிய இசைக் கருவிகளின் ஒத்துழைப்புடன் மிக இனிமையாகப் பாடப்பட்ட அந்தப் பாடலைக் கேட்டு மக்கள் மெய்மறந்திருந்தார்கள். அந்தப் பெரிய ஜனக் கூட்டத்தில் அப்போது நிசப்தம் நிலவியது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கருத்துடன் செயற்படு

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன்



ஒரே ஒரு பந்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பந்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படிக் கண்டுகொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவன் ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை. அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகி விட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்கு முன் கடலில் தூர எறிந்து விட்டான்.

செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிகளை மீறிய சதிகளாலும் மதிகெட்ட மாந்தர்களின் இழிவான செயல்களாலும் நீதி என்பது நெடுந்தொலைவிலேயே நிற்கின்றது. -யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிட்டுக்கு மண் சுமந்தவன் வந்தாலும் தீராது இத்துயரம்

வைகை நதி பெருக்கெடுக்கிறது. அணை கட்டுமாறு பாண்டிய மன்னன் அறிவித்தல் கொடுக்கின்றான்.

அவரவர் தமக்கு ஒதுக்கப்பட்ட அணையைக் கட்டுகின்றனர்.

அந்த ஊரில் பிட்டு அவித்து அதனை விற்றுச் சீவியம் நடத்தும் செம்மணச்செல்வி எனும் மூதாட்டி ஆள் உதவியின்றி தனக்குரிய அணையைக் கட்ட முடியாமல் வேதனைப்படுகின்றார்.

தன் துயரத்தை சிவப்பரம்பொருளிடம் முறையிடுகின்றார்.

சிவன் செம்மணச்செல்விக்கு உதவும் பொருட்டு தானே கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்து அணை கட்டினார் என்ற புராணக்கதை அனைவரும் அறிந்ததே.

இப்போது மாரி காலம். மாரி என்பது மழைக்காலத்தை சிறப்பிக்கும் சொல்.

ஆக, மாரி காலத்தில் மழை கொட்டும். வெள்ளம் பாய்ந்தோடும். வயல்கள் வெள்ளத்தில் மூழ்கும். வெள்ள வாய்க்கால்கள் அவற்றை மீட்டெடுக்கும்.

குடியிருப்புப் பகுதிகளில் சேருகின்ற மழைநீர் இயற்கை அமைத்த நியதியின்படி வழிந்தோடி குளங்களில் தங்கும். மிஞ்சியவை கடலோடு கலந்து சங்கமமாகும். இதுவே வழமையும் நிலைமையுமாகும்.

என்ன செய்வது மெத்த படித்தவர்கள் தாம் நினைத்தபடி வீதியை உயர்த்தினர். புகையிரதப் பாதைகளை மலையாக்கினர். கூடவே மட்டை வேலிகள் எல்லாம் மதிலாக மாறின.

இப்போது வைகை நதி இல்லாமலே எங்கள் வீடுகளில் வெள்ளப் பெருக்கு.

என்ன செய்வது சிறு மழை பெய்தாலே மக்கள் ஏங்குகின்ற அளவில் நிலைமை முற்றிவிட்டது.

ஆம், வீதிகளை உயர்த்திவிட, வீடுகள் தாழ்ந்து போயின.

இனி வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து கொள்ள, மக்கள் வீதிகளில் நிற்கின்ற நிர்க்கதி.

என்ன செய்வது தரை அமைப்பு, நீரோட்டம், அனுபவமுள்ள பெரியவர்களின் கருத்துக்கள் என எதுபற்றியும் அறியாமல், ஆராயாமல் தாம் நினைத்தபாட்டில் வீதியை உயர்த்தி இரு புறமும் வடிகால் குஞ்சம் கட்டிவிட, இப்போது மக்கள் மன்னனின் கட்டளை இல்லாமலே வெள்ளத்துக்கு அணை கட்ட மண்வெட்டியோடும் கடகத்தோடும் விழித்திருக்கின்றனர்.

ஓ! யாரிடம் சென்று முறையிடுவது. அந்த ஆலவாய்ப் பெருமானிடம் முறையிட்டும் என்ன பயன்.

வைகை நதி பெருக்கெடுத்தால் அதனைத் தடுக்க அணை கட்ட முடியும்.

இங்கோ வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கி நிற்பதற்கென்றே வீதி என்னும் அணை கட்டப்பட்டிருக்கிறதே. என்ன செய்ய முடியும். பிட்டுக்கு மண் சுமந்த அந்தப் பெருமான் நேரில் வந்தாலும் இத்துயரம் தீரப்போவதில்லை.

கூடவே சொட்டு மழைநீரும் வீணாகக் கூடாது என்ற பராக்கிரமபாகு மன்னனின் கருத்தைச் சிரமேற்கொண்டவர் போல் நீர் வழிந்தோடும் பாதைகளெல்லாம் சுற்றுமதில் கட்டி, கொட்டுகின்ற மழைநீர் முழுவதும் நம் வீட்டுக்குள் நிற்கவென்றே விதி சமைத்த எங்கள் அறிவை என்னவென்று சொல்வது.

ஆக, மாரிகாலத்தில் மழை வெள்ளத்தை உறிஞ்சுகின்ற ரோபோக்கள் ஏதேனும் கண்டறிந்தாலன்றி, இத்துயரம் இப்போதைக்கு தீரப்போவதில்லை என்பது திண்ணம்.

# மனித குலத்தின் ஆரோக்கியம் ஆபத்தில் சர்வதேச நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

பருவநிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், மனித குலத் தின் ஆரோக்கியம் பெரும் ஆபத்தாக மாறும் என சர்வதேச நிபுணர்கள் குழு எச்சரித்துள்ளது.

அதாவது கடும் வெப்பத்தால் 2050ஆம் ஆண்டுக்குள் உலகெங்கும் இப்போதுடன் ஒப்பிடுகையில் சுமார் 5 மடங்கு அதிகமான மக்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதென அனைத்துலக நிபுணர்கள் குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தி லான்செட் கவுண்ட்டவுன், முன்னணி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிறுவனங்களின் வருடாந்திர மதிப்பீட்டின்படி,

சுற்றுப்புறத்துக்கு மாசு ஏற்படுத்தும் எரிபொருள்கள் தொடர்ந்து அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

மக்களின் சுகாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல அம்சங்களில் அவற்றால் உண்டாகும் கடும் வெப்பமும் ஒன்று எனக் குழு தெரிவித்தது.

அதிக வறட்சி காரணமாக மில்லியன் கணக்கானோர் பசிபட்டினியால் வாட நேரிடலாம். கட்டுக்கடங்காத கொசுப் பரவல், தொற்று நோய்களை அதிகரிக்கக்கூடும். அவற்றால் சுகாதாரக் கட்டமைப்பு கடும் நெருக்குதலுக்கு உள்ளாகும் என்று அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (நி-5)

## வடமாகாண அதிபர் சங்கம் ஆளுநருடன் கலந்துரையாடல்

வடமாகாண அதிபர் சங்க பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று முன்தினம் இக் கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர்செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

19 ஆலோசனைகளை முன்வைத்து இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மாணவர் பரம்பல் சில பாடசாலைகளில் குவிந்தும் வேறுபலவற்றில் நலிந்தும் இருப்பது, ஆரோக்கியமற்ற நிலையாகும். பிரபல பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை உச்ச அளவு வரையறை செய்ய வேண்டும். இதன்மூலம் ஏனைய பாடசாலைகளில் நெருக்கடியற்ற மகிழ்வான சூழலில் இணை பாடவிதான நிகழ்வுகளில் மாணக்கர் அதிகம் பங்கெடுத்து நல்ல உடல் உள, ஆரோக்கியமான மாணவர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக, வடமாகாண அதிபர்கள் சங்கத்தால் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைவர் த.ஜெயந்தன், செயலாளர் கு.திலீபன், பொருளாளர் தி.வரதன் மற்றும் வலயப் பிரதிநிதிகளான பொ.நடேசலிங்கம், சூ.திலகதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## வடக்கில் 7 ஆயிரம் மாணவர்கள் உயர்கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்

### வடமாகாண பிரதம செயலர் சமன்பந்துல

(யாழ்ப்பாணம்)

வடக்கில் 7ஆயிரம் மாணவர்கள் க.பொ.த உயர்தர பரீட்சையின் பின்னர் தமது உயர் கல்வியை தொடராது கல்வி நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளனர் என வடமாகாண பிரதம செயலர் சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் வடமாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் மனைப்பொருளியல் மற்றும் ஆடை வடிவமைப்பு கற்கை நெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழை வழங்கி வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் 7000 இற்கும் மேற்பட்டோர் உயர்தர பரீட்சையுடன் கல்வியை இடைநிறுத்தி யுள்ளனர். அவ்வாறு உங்கள் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தாது, சாதாரண தர சித்தி, உயர்தர சித்தி பெற்று பல்கலைக்கழகம் போக முடியாவிட்டாலும் அந்த கனவினை நீங்கள் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் ஊடாக பெற்று கொள்ளலாம்.

தேசிய தொழில் தகைமை சான்றிதழ் கற்கை நெறியை தொடர ரூபாய் 25000 வழங்கப்படும். இது குறித்து வடமாகாண பிரதம செயலகத்தின் இணையத்தளத்தினூடாக மேலதிக தரவுகளை பெற்று கொள்ளலாம்.

தேசிய தொழில் தகைமையினை அதன் நான்காம் தரத்துடன் (NVQ level - 4 ) நிறுத்திவிடாது அதன் ஏழாம் தரம் (NVQ level - 7) வரை செல்வதன் ஊடாக நீங்கள் பட்டம் ஒன்றினை பெற்று கொள்ளலாம். அவ்வாறு தேசிய தொழில் தகைமையின் 7 ஆம் தர்த்தினை பெற்றால் நீங்கள் அரசாங்கத்தின் உயர் பதவிகளை வகிக்கலாம்.

உண்மையிலேயே எத்தனையோ பட்டதாரிகள் வேலைவாய்ப்பு இன்றி இருக்கின்றார்கள். அவர்களுக்கு கல்வி தகைமை இருக்கின்றது. ஆனால் தொழில் தகைமை இருப்பதில்லை என அவர் தெரிவித்தார். (நி-5-33)

## தேர்தல் சட்டம் திருத்தம் யோசனைகள் இன்று முதல் முன்வைக்கலாம்

(கொழும்பு)

தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பான யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை இன்று முதல் முன்வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு குறித்த ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 15ஆம் திகதி வரை அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஆர்வமுள்ள தரப்பினர் ஆகியோர் குறித்த ஆணைக்குழுவில் தமது யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிளி/பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தலைவர் அறிவித்துள்ளார். (நி-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** அச்சுவேலி ஆயுள்வேத வைத்தியசாலை, டச்சு வீதி - அச்சுவேலி, மருதடிச் சந்தி - பலாலி, செல்வநாயகபுரம் - வசாவிளான், சென்ற் ஜேம்ஸ் சந்தி - பலாலி தெற்கு கச்சாய் வீதி- சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** போகஸ்வேவா, மகாகச்சக்கொடிய, நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

'மரங்களின் மீது கரிசனை
கொண்ட கடவுள் அவற்றை
வறட்சி, நோய்கள், பனிச்சரிவுகள்,
ஆயிரமாயிரம் சூறாவளிகள்
மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து
காப்பாற்றினாலும் முட்டாள்களிடம்
இருந்து மட்டும் அவரால்
அவற்றை காப்பாற்ற முடியவில்லை.'

-ஜோர் முர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

01


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.




சர்வதேச நாணய நிதிய கடன் வசதி பற்றி இந்த நாட்களில் நிறைய விவாதங்கள் நடந்து வருகின்றன. இதற்கு முன்னர் 16 முறை சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற்றுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகோருவது இது 17ஆவது முறையாகும். முன்பைப் போலவே இம்முறையும் அரசு சர்வதேச நாணய நிதியத்திலிருந்து ஆதரவைப் பெறும் போது, அதற்கு எதிராகவும் ஆதரவாகவும் வாதங்கள் உள்ளன. உண்மையில், நம் பிரச்சினைகளை நாமே தீர்க்க முடிந்தால் அதுவே சிறந்தது. அதாவது, சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்லாமல் இந்த நெருக்கடியைத் தணிக்கும் திறன் நம்மிடம் இருந்தால், அதுவே சிறந்த விஷயம்.

சர்வதேச நாணய நிதியம் வலுக்கட்டாயமாக எங்களின் உதவிக்கு வரவில்லை. கஷ்டத்தில் இருந்த எங்களின் கோரிக்கையின் பேரில் தான் இந்த நிதியம் எங்களுக்கு உதவியாக வந்துள்ளது. எங்களுடைய நோயின் தீவிரத்தினால் இந்த கசப்பான கஷாயத்தை விருப்பமில்லாமல் குடிக்க வேண்டியதாயிற்று.

இந்த நேரத்தில் நாடு எதிர்கொள்ளும் நெருக்கடியை சமாளிக்க எளிதான தீர்வுகள் இலங்கைக்கு இல்லை. சர்வதேச நாணய நிதியம் வழங்கும் இந்த நிதி வசதித் திட்டம், இந்த நெருக்கடியின் மூலம் அனைத்து இலங்கையர்களும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் நாட்டை நிலையான வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கும் ஒரு வாய்ப்பாகும்.மேலும் IMF எங்கள் வழியில் எங்களுக்கு ஆதரவளிக்கக் காத்திருப்பதாகத் தான் கூறுகிறது.

சுமார் 330 மில்லியன் டொலர்கள் இந்த நீட்டிக்கப்பட்ட கடன் வசதி மூலம் இலங்கைக்கு உடனடியாகக் கிடைத்தது. இந்த தொகை இவ்வளவுதானா என்பது குறித்து பல விமர்சனங்கள் உள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தால் தரப்படும் இந்தத் தொகை ஒப்பீட்டளவில் சிறிய தொகையாக இருந்தாலும் (நமது நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வர போதுமானதாக இல்லை.) இது நமது நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஒரு முக்கியமான ஆரம்ப படியைக் குறிக்கிறது. சர்வதேச நாணய நிதியம் எம் மீது ஏற்படுத்திய நம்பிக்கையின் காரணமாக, ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி உள்ளிட்ட புதிய வெளிநாட்டு நிதி உதவிகளை எம் நாடு ஈர்க்க முடியும்.

சர்வதேச நாணய நிதியத் திட்டம் மற்றும் அதனுடன் இணைந்த பொருளாதார சீர்திருத்த திட்டத்திற்கான அணுகல் மிகவும் முக்கியமானது. ஒரு நாடாக நமக்குப் பிடிக்காத விஷயங்களையும் இங்கே செய்ய வேண்டியிருக்கும். உதாரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இலங்கைமின்சாரசபையும் ஏற்கனவே செய்த செலவை ஈடுகட்ட எண்ணெய் ம்ற்றும் மின்சார விலைகளை கணிசமாக அதிகரிக்க வேண்டும். இந்த சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் காலப் பகுதியில் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் இலங்கை மின்சாரசபையும் நட்டத்தில் இயங்க முடியாது. அதாவது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் நிறைவடையும் வரை அதற்கான செலவை பெற்றோலிய சட்டபூர்வ கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபையின் விலைகள் அதிகரிப்பதன் மூலம் ஈடுகட்ட வேண்டும்.

எவ்வாறாயினும், எமது சொந்த பொருளாதார முகாமைத்துவத்தின் தவறு காரணமாக, இப்போதைய பிரச்சினை எமது நாட்டின் வரலாற்றில் சந்தித்த மிக சக்தி வாய்ந்த பரிமாற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடியாக மாறியுள்ளது. எனவே நாம் இருந்த காலத்தை கடந்து வெகுதூரம் சென்று விட்டோம் என்று கருதுகிறோம். இந்த பரிமாற்ற நெருக்கடியை நாமே தீர்க்கும் திறன் எமக்கு உள்ளதா என்றால் இல்லை என்பது வெளிப்படை. எமது முக்கிய பிரச்சினையாக அந்நியச்செலாவணி நெருக்கடியைக் குறிப்பிடலாம்.

இப்பிரச்சினை மத்திய வங்கியில் இருந்து பணம் பெறுவதன் மூலம் தீர்க்கப்படக் கூடிய பிரச்சினை அல்ல. நமது வெளிநாட்டுக் கடனை அந்நியச் செலாவணி வருவாய் மூலம் தான் தீர்க்க வேண்டும். எனவே வெளிநாட்டு நாணயம் இல்லாமல் இவை எதுவும் சாத்தியமில்லை.

வெளிநாட்டுக் கடனைத் தீர்ப்பதற்கு மட்டுமல்ல, எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற பிற அத்தியாவசிய இறக்குமதிகளுக்கும் எங்களுக்கு வெளிநாட்டு நாணயம் தேவைப்படுகிறது. இந்த கடுமையான வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாட்டால் எண்ணெய் வரிசைகளிலும் எரிவாயு வரிசைகளிலும் தவித்த காலத்தை நாம் யாரும் மறந்திருக்கவில்லை.

பல நாட்களாக இந்த வரிசையில் நின்ற சிலர் இறந்தனர். கடந்த ஆண்டு (2022) ஏப்ரல் 12 அன்று வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதை அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்த வேண்டியிருந்தது. ஏனெனில் எமது வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதற்கு எமது வெளிநாட்டு கையிருப்பு போதுமானதாக இருந்திருக்கவில்லை.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவிக்காமல் இதை அறிவித்தது தொடர்பாக பல விவாதங்கள் நடந்தன. அந்த வகையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கான பதில்களையும் வழங்க வேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும் எங்களிடம் வெளிநாட்டு நாணயம் இல்லையென்றால் வெளிநாட்டு கடனை செலுத்துவது மட்டுமல்லாமல் அத்தியாவசிய இறக்குமதிகளையும் மேற்கொள்ள முடியாது என்பது எமக்குத் தெரியும்.

அந்நியச் செலாவணி வருவாய் இல்லாததன் காரணமாக, அரசாங்கம் வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியது. மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயல் முறையில் இறங்கியது. இதன் விளைவாகவே எங்கள் வெளிநாட்டு கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் நிதி சான்றிதழ்களைப் பெற ஏற்பாடானது என்பவை அனைத்தும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெறுவதற்கான முன் நிபந்தனைகள் என்பதும் எமக்குத் தெரியும். மேலும் அரசாங்கம் வெளிநாட்டுக் கடனை செலுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தியதை தனியொரு சம்பவமாகவும் கருத முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவான கடன் வசதிக்காக 2023 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையின் அனுமதியை நாம் பெற்றுள்ளோம். மேலும் கடனுக்கான முதல் தவணையாக 333 மில்லியன் அமெரிக்கடொலர்களையும் பெற்றுள்ளோம். எங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தினால் அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை அண்ணளவாக 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இந்த கடன் வசதி 4 ஆண்டுகள் அதாவது 48 மாதங்கள் நீடிக்கும் நீண்ட திட்டத்திற்கு மட்டும் எங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் 20.03.2023 அன்று சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட இந்த நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கு ஒப்புதல் அளித்து வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விரிவாக்கப்பட்ட கடன் வசதி மற்றும் தொடர்புடைய வேலைத்திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் இலங்கையில் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பது. ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீதான பொருளாதார தாக்கங்களை குறைப்பது. நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் நிர்வாக மற்றும் வளர்ச்சி திறன்களை வலுப்படுத்துதல் ஆகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் முடிவின் படி சுமார் 333 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தவணையை உடனடியாக விடுவிக்கப்பட்டது. இது மேம்பாட்டுப் பங்காளிகளிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு வழிவகுத்தது.

எனவே, இந்த கடன்களை வழங்குவதன் மூலம் திட்டத்தின் நோக்கங்கள் என்ன என்பது தெளிவாகிறது. கடன்களைப் பெறுவதற்கு நாம் குறிப்பிட்ட சில இலக்குகளை அடைய வேண்டும். அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நாம் ஒப்பந்தத்தின் படி செயற்பட வேண்டும். செயற்படாவிட்டால் கடன் பெறும் தவணைகளை உரிய நேரத்தில் பெற முடியாமல் போகலாம்.

நாம் இது வரை பெற்ற முதல் கடன் தவணை பணத்தில் ஒரு பகுதியை செலவு செய்துள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்ட கடனின் முதல் தவணையிலிருந்து 121 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்திய கடன் திட்டத்தின் உரிய தவணை செலுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த பணத்தின் ஒரு பகுதியை அரசாங்கம் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு பயன்படுத்துவதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். அரசாங்கம் ஊழியர்களின் சம்பளம் வழங்குவதற்கு இதனைப் பயன்படுத்துவது சரியா என்பது அடுத்த கேள்வி.

சர்வதேச நாணய நிதியம் வழங்கும் இவ்வாறான கடன் பணத்தை அரசாங்கம் பயன்படுத்த முடியாது. அதாவது, சர்வதேச நாணய நிதியம் வழங்கும் இத்தகைய கடன்கள் மத்திய வங்கியால் பெறப்பட்டு, அதன் மூலம் நமது வெளிநாட்டு கையிருப்பு அதிகரிக்கும் வகையில் வைப்பில் இட வேண்டும். ஆனால் இப்பணம் சற்று வித்தியாசமான முறையில் பயன்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதாவது இம்முறை கிடைத்த கடன் தொகை திறைசேரியில் பிரதிச் செயலாளர் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாசக்...

கடந்த 14ம் திகதி உணவு அருந்தி விட்டு இருந்தவர் நெஞ்சடைப்பு ஏற்பட்டதாக கூறியதால் வீட்டார் சுடுநீர் வழங்கியுள்ளனர்.

இதன் பின்னர் இளைஞர் மயங்கிச் சரிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றபோது இளைஞன் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இதற்கமைய சட்ட வைத்திய அதிகாரி பி.வாசுதேவா உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்டிருந்தார். இதன்போது இளைஞனின் சுவாசக் குழாய்க்குள் உணவு மாதிரி காணப்பட்டதாகவும், சுவாசக் குழாய்க்குள் உணவுப் பதார்த்தம் அடைத்துக் கொண்டதன் காரணத்தாலேயே உயிரிழப்பு சம்பவித்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7, 60)

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3542
சீட்டிழுப்பு திகதி 16.11.2023
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 02 35 50 77
C
36166
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.11.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1330
V 32 41 52 74 V
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Double Chance 49112

Lucky 7 லக்கி
திகதி 16.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0126
L7 இலக்கம் 2 0
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 5 9 7 1 6 2

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.16
சீட்டிழுப்பு இலக்கம் 0609
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 17 28 34 35 துலாம்
53689 தேசிய லொத்தர் சபை 15

மெகா பவர்
திகதி 16/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1648
F 02 04 38 61 64
Double Chance 45428

மஹஜன சம்பத
திகதி 2023/11/16
சீட்டிழுப்பு இலக்கம் 5300
U 6 0 6 9 9 2
தேசிய லொத்தர் சபை

## மாலைதீவுக்கு...

நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலைதீவு நோக்கி சென்றுள்ளார்.

மாலைதீவில் அண்மையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் மாலைதீவின் எதிர்க்கட்சி வேட்பாளர் இப்ராகிம் முஹமது ஷோலி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழில் நூற்...

கிழமை முறிந்து விழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக வீதியோரமாக இருந்த 150 வருட கால மலைவேம்பு மரமே முறிந்து விழுந்துள்ளது.

பாடசாலைக்கு முன்னால் இருந்த நிலையில் மரம் வீதிக்கு குறுக்காக விழாது வெற்றுக் காணிக்குள் விழுந்ததால் பாரிய அனர்த்தம் தவிர்க்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் வீதியோரமாக உள்ள மரங்கள் முறிந்து விழுகின்ற நிலையில் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7,33,104)

## 2024 வரவு...

கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கடந்த 2017ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட கடன்களை தொடர்ந்து பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க ஆரம்பித்திருந்ததாகக் கூறும் அவர், அப்போதைய இலங்கை அரசாங்கமும் 2019ஆம் ஆண்டில் குறித்த கடன்களை மீளச் செலுத்தத் தவறிய ஆட்சியாளர்களும் இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலைக்கு பொறுப்பு கூற வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் பிரதமராகக் கடந்த 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விசேட கருத் தொன்றை முன்வைத்திருந்தார். 2020ஆம் ஆண்டில் இலங்கை கடனற்ற நாடாக மாறுமென் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

எனினும், 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் அவர் 12.5 பில்லியன் டொலர்களை கடனாக பெற்றுக் கொண்டிருந்தார்.

இதனை 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் 2020ஆம் ஆண்டில் கடனை செலுத்த முடியாத நாடாக இலங்கை மாறியது.

இதனை தொடர்ந்து, கடந்த ஆண்டு இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் என்னை மேலும் கவலையடைய செய்கிறது.

வரவை விட அதிகமான செலவுகளை கொண்ட வரவு செலவு திட்டங்கள் கடந்த காலங்களில் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. இதனை எம்மால் சுட்டிக்காட்ட முடியும்.

இலங்கையின் வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் தற்போது நாம் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதற்கு உள்நாட்டு உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்" என்றார். (ம-7)

## புலம்பெயர்...

நியபோதே ஜனாதிபதி ரணில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் மேலும் அவர் உரையாற்றுகையில்,

மொழி அறிவை சிங்களம், தமிழ் மொழிகளோடு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது.

2030ஆம் ஆண்டளவில் "அனைவருக்கும் ஆங்கிலம்" என்ற திட்டம் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பல்கலைக்கழகங்களிலும் அறிமுகப்படுத்தப்படும் என்றார். (ம-7)

## வடக்கு, கிழக்கில்...

பலத்த காற்று மற்றும் மின்னலினால் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களிடம் வளிமண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது. (ம-7)

## பொருளாதார...

ஊடகங்களிடம் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்று சிறப்புமிக்க, புரட்சியான ஒரு வரவு செலவுத் திட்டத்தையே இம்முறை சமர்ப்பித்துள்ளார். இது வங்குரோத்து அடைந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவித்த ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டமாகும்.

வேறு எந்தவொரு நிதி அமைச்சரும் வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும் போது இவ்வாறான தொரு நிலைமை நாட்டில் இருக்கவில்லை. இந்நாடு, பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு தர்க்க ரீதியிலான பிரதான இரண்டு காரணங்களே உள்ளன.

முதலாவது, அரச வரவு செலவுத் திட்டத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை. இரண்டாவது, சர்வதேச கொடுப்பனவுக் கைவிருப்பின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை ஆகியவை ஆகும்.

நாட்டின் அன்றாட செயற்பாடுகளுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் நிர்வாக செலவுகளுக்கு போதுமான அளவு நிதி இல்லாமை மற்றும் இறக்குமதிகளுக்கு ஏற்ப ஏற்றுமதி வருமானம் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இந்தப் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றன என்றார். (ம-7)

## உயர் நீதிமன்றம்...

பொருளாதார நெருக்கடி நிலைக்கு ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட அதிகார வர்க்க குழுவே காரணம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து, அக்கட்சி பெரும் சிக்கலில் உள்ளது.

இதனால் ஊடகங்களின் கேள்விகளுக்கு முகங்கொடுக்க முடியாத நிலை கட்சிக்கு ஏற்பட்டுள்ளதால் மேற்படி தீர்மானத்தை அக்கட்சி எடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

நிலைமை ஓரளவுக்கு அமைதியடையும் வரை கட்சித் தலைமையகத்தில் நடைபெறும் தினசரி ஊடகவியலாளர் சந்திப்பை இரண்டு வார காலத்திற்கு தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
திகதி 16.11.2023 வெற்றி வாரம் 008 வர்ணம் மஞ்சள்
H 2 7 7 9 7 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,368,921.60
DLB DEVELOPMENT LOTTERIES
தொலைபேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2274 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.11.16 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 38 42 56 57 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,556,260/-

சனிதா Shanida
திகதி 2023.11.16 வெற்றி வாரம் 4435 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 13 46 52 72 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,037,088.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3986 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.16 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 33 41 44 53 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,855,020/-

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 06 26 57 60 73
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1450
2023.11.16 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 465,837,054.20
DLB தொலைபேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2100
வர்ணம் : இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2023.11.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,564,016/-
வெற்றி இலக்கங்கள் 40 51 52 55 G

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணப் பொய்கை நுண்கலை கூடத்தின் மனமார்ந்த நன்றிகள்











மங்கள விளக்கேற்றல் நிகழ்வுகளின் பதிவுகள்...







விருந்தினர் வரவேற்பு...




பெயர்ப் பலகை திறந்து வைப்பு...



நுண்கலை கூடம் திறந்து வைப்பு...




பூசை வழிபாடுகள்...




மங்கள இசை விருந்து...



மாணவர்கள் கலை நிகழ்வுகள்...




காலம்: 24.10.2023 செவ்வாய்க்கிழமை
நேரம்: மதியம் 2.30
இடம்: சரவணப்பொய்கை அக்கடமி சோபாலபிட்டி. பூநகரி .
தலைமை: திரு.இராமலிங்கம் பாலச்சந்திரன்
(முதல்வர் கிளி/பூநகரி மத்திய கல்லூரி)
பிரதம விருந்தினர் : திரு.செல்லத்துரை உதயகுமார்
(ஓய்வுநிலை வடமாகாண கல்விப்பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினர்கள் : திரு.தனபாலசிங்கம் அகிலன்
(பிரதேச செயலாளர். பிரதேச செயலகம். பூநகரி.)
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
(சிரேஸ்ட விரிவுரையாளர். ஆங்கிலமொழிக் கற்பித்தல் துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)
வைத்திய கலாநிதி சிறிகந்தராசா ஆனந்தசிறி
(மருத்துவமனை பொறுப்பதிகாரி.
பிரதேச வைத்தியசாலை பூநகரி.)
திரு.பரஞ்சோதி பரணீதரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்.
கல்வி அபிவிருத்தி வலயக்கல்வி அலுவலகம்.
கிளிநொச்சி தெற்கு.)
திரு.நாகேந்திரம் கணேஸ்வரநாதன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர். பூநகரி.)
கௌரவ விருத்தினர்கள்
திரு.I.G.Nuwan Asiri
(பொறுப்பதிகாரி பொலிஸ் நிலையம். பூநகரி)
திரு.இரத்தினம் தயாபரன்
(செயலாளர். பிரதேச சபை. பூநகரி.)
திருமதி.காசிநாதன் நிருபா
(கலாச்சார உத்தியோகத்தர். பூநகரி.)

சோபாலபிட்டி. பூநகரி சரவணப்பொய்கை நுண்கலைக்கூடம் திறப்பு விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்களுக்கும் மற்றும் இந் நிகழ்வு சிறப்புற நிகழ ஒத்துழைப்பு வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும் இருகரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-7675) **சரவணப்பொய்கை, பூநகரி.**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org